www.padippakam.com



# வன்னி நாடும் ஒல்லாந்தரும்

41




யாழ்ப்பாண இராச்சியத்தின் நிர்வாக எல்லைக்கு அப்பால் 'வன்னி' எனப்படும் பரந்து விரிந்த விசாலமான நாடு. தமிழர்களுடைய பூர்வீக நிலமாகவும், தமிழர் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பரப்பாகவும் இருந்து வந்தது. யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயரிடம் வீழ்ந்து, அதன்பின் ஒல்லாந்தர் ஆட்சிக்கு உட்பட்ட பின்பும் கூட வன்னியில் தமிழரசர்களின் ஆட்சியே இருந்தது.

'வன்னியர்கள்' என்று அழைக்கப்படும் வன்னிப் பிரதேச ஆட்சியாளர்கள் சோழர்கள் இலங்கைக்குப் படையெடுத்த காலத்தில் அவர்களுடைய படைத் தலைவர்களாக வந்து அப் பிரதேசத்தில் குடியேறியவர்கள் என்று கருதப்படுகிறது. சோழர்கள் அந்த நிலத்தை அவர்களுக்குத் தானமாகக் கொடுத்ததால் அவர்களுடைய சாதிப் பெயரால் அந்த நிலம் வன்னிநாடு என்று அழைக்கப்பட்டது. ஆனால் அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் 'வன்னியர்கள்' எனப்படும் சாதி அமைப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பது ஒரு முக்கியமான விடயம். 'ஆய், பரதவர், வேளிர்' முதலான இலங்கையின் பூர்வீகக் குடிகளின் வழித்தோன்றல்களே இப் பிரதேசத்தில் பெருமளவுக்கு வாழ்ந்து வந்தனர்.

இந்த நிலப்பரப்பு தமிழ்நாட்டுக்கு சமீபமாக இல்லாமல் சற்றுத் தள்ளியிருந்ததால் அங்கிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் பார்ப்பனியமும், பார்ப்பனியச் சாதியமைப்பும் புலம் பெயர்ந்து வந்து வேர் விட்டதுபோல் இங்கு வேர்விடவில்லை. இன்றைய கிழக்கு மாகாணமான தென் வன்னிப் பகுதியில் நிலவிய 'போடியார்' என்ற நிலப் பிரபுத்துவ அமைப்பு தமிழ்நாட்டிலோ யாழ்ப்பாணத்திலோ இல்லாத ஒரு அமைப்பாகும். இது அந்த வன்னிய சமூக அமைப்பில் உருவான ஒரு பிரத்தியேகமான அமைப்பாகும்.

போர்த்துக்கேயர்கள் காலத்தில் வன்னி நாட்டின் சில பகுதிகள் அவர்களின் மேலாண்மையை ஏற்று திறை செலுத்தி வந்த போதும், சில வன்னிய சிற்றரசர்கள் அவர்களுக்கு அடிபணியாது சொந்தக் காலில் நின்றார்கள்.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் அதாவது கி.பி. 1679-ல் வன்னி நாடு;

(1) பனங்காமம், பரந்தன் வெளி
(2) பேகன் விளாங்குளம்
(3) மேற்பற்று, முள்ளியவளை
(4) கரிக்கட்டு மூலை
(5) கருநாவற்பற்று, புதுக்குடியிருப்பு
(6) தென்னமரவாடி

என்று ஆறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு வன்னியர் சிற்றரசர்களாக இருந்தனர். போர்த்துக்கேயர்களைப் போல் வன்னியர்களை அதிகம் நெருக்கினால் அவர்கள் கண்டி அரசனுடன் சேர்ந்துவிடுவார்கள் என்ற பயத்தில் ஒல்லாந்தர்கள் அவர்களை மரியாதையுடன் நடத்தினார்கள். போர்த்துக்கேயர்களுக்குக் கொடுத்ததைப்போல 42 1/2 கொம்பில்லாத யானைகளும் (1/2 யானை = குட்டியானை), 125 தீராந்திகளும் (மரச்சட்டங்கள்) திறையாக ஒவ்வொரு வருடமும் தங்களுக்குச் செலுத்தினால் போதும் என்று அறிவித்திருந்தனர். எல்லா வன்னியச் சிற்றரசர்களும் அவ்வறிவித்தலை ஏற்றபோது, பனங்காமத்து அரசனான கைலாய வன்னியன் மட்டும் அதை ஏற்று அவர்களுக்கு திறை செலுத்த முடியாதென்று முரண்டு பிடித்தான். அதனால் ஒல்லாந்தர்கள் மற்ற வன்னியர்கள் அவனோடு மோதுவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தும் சூழ்ச்சியில் இறங்கினர்.

அவர்களது சூழ்ச்சிக்கு ஒரு சில வன்னியர்களைத் தவிர பெரும்பாலோனோர் இணங்கவில்லை. அவர்கள் ஒல்லாந்தர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக கைலாய வன்னியனுடன் சேர்ந்து கொண்டதால் கி.பி. 1680-ம் ஆண்டு 313 யானைகள் திறை செலுத்தப்படாமல் இருந்தது.

வன்னியர்களுடன் யுத்தம் செய்து இந்தத் திறையைக் கட்டும்படி அவர்களை நிர்ப்பந்திக்க முடியாதெனக் கண்டு கொண்ட ஒல்லாந்தர்கள், இந்த நிலுவை தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதென்றும், இனிமேல் ஒழுங்காகத் திறை செலுத்த வேண்டும் என்றும் கி.பி. 1693-ம் ஆண்டு ஒரு சலுகை அறிவிப்பு வெளியிட்டனர். ஆனால் அதுவும் உரிய பலனைக் கொடுக்கவில்லை. கி.பி. 1696-ல் 70 யானைகள் நிலுவையாகப் போய்விட்டன.

இதனால் கோபங்கொண்ட ஒல்லாந்தர்கள் ஒவ்வொரு வன்னியச் சிற்றரசர்களும் வருடத்தில் மூன்று மாதம் யாழ்ப்பாணத்தில் வந்து வசிக்க வேண்டும் என்று கட்டளை இட்டார்கள். ஒரு சில வருடங்கள் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்ட இச் சட்டம் பெரும்பாலான வன்னியர்கள் இதற்கு ஒத்துழைக்காததால் பின்பு கைவிடப்பட்டது.

வன்னி - யாழ்ப்பாண இராச்சியம் உட்பட இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் விளையும் உற்பத்திப் பொருட்களான வியாபார உரிமை தங்களுக்கு மட்டுமே உரியது என்று ஒல்லாந்தர்கள் அறிவித்திருந்த போதும் அவர்களுக்குத் தெரியாமலே வன்னியர்கள் கடல் மார்க்கமாக தமிழகத்துடன் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருந்தனர். ஒல்லாந்தரின் காவல் இல்லாத முல்லைத்திவு, அலம்பில் பகுதிகளில் இருந்து பாக்கும், யானைத் தந்தமும் தமிழ்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அங்கிருந்து புடவைகள் இறக்குமதி செய்யப்பட்டன.

இந்த விடயத்தை டொன், அந்தோனி குலசேகரன் என்ற வன்னியன் பதவி ஆசையால் கி,பி, 1714-ல் ஒல்லாந்து தேசாதிபதியாக இருந்த ஹென்றிக் பெக்கருக்கு (Hendrick Becker) தெரிவித்தான். அரசியலைவிட வியாபாரத்தில் குறியாக இருந்த ஒல்லாந்தர்கள் இதனால் கடும் சீற்றம் கொண்டு வன்னி மீது படையெடுக்கத் தீர்மானித்தார்கள்.

இவ்வாறு அவர்கள் தமது நாட்டின் மீது படையெடுக்க வருவதை அறிந்த வன்னியர்கள், தமக்கு உதவி செய்யுமாறு கண்டி அரசனிடம் தூதனுப்பினார்கள். அப்போது கண்டியரசனாக இருந்தவன் ஒல்லாந்தர்களுடன் நட்புக் கொண்டிருந்த படியால் வன்னிய சிற்றரசர்களின் தூதுவர்களைச் சிறைப் பிடித்து கொழும்பிலிருந்த ஒல்லாந்த தேசாதிபதியிடம் கையளித்துவிட்டான்.

அதன்பின் கி.பி.1715-ல் தங்களுக்கெதிராக தனியாக வர்த்தகம் செய்த வன்னியர்களில் முக்கியமானவர்களான புவிநல்லமாப்பாண வன்னியன் மீதும் நிச்செய சேனாதிராய வன்னியன் மீதும் படையெடுத்து அவர்களைக் கைது செய்ததுடன் தாங்கள் படையெடுத்து வந்த செலவுக்காக அவர்களது நாட்டையும் சொத்துக்களையும் பறிமுதல் செய்ததாகவும் அறிவித்தனர்.

பிற்பாடு தங்களுக்கு அவர்களைக் காட்டித் தந்த குலசேகர வன்னியனை அப் பகுதிக்கு அரசனாக்கி, முல்லைத்தீவுக் கடற்கரையில் மரத்தாலான கோட்டை ஒன்றையும் கட்டுவித்தார்கள். அக் கோட்டையில் 24 ஒல்லாந்தர்களும் 20 சிங்களப் படையினரும் நிறுத்திவைக்கப்பட்டனர். அத்துடன் கடலிலும் பீரங்கிக் கப்பல் ஒன்றும் நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப்பட்டது.

வன்னியர்களுடைய அடங்காத் தன்மையைப் பற்றி கி.பி. 1697-ல் யாழ்ப்பாணக் கம்மாந்தோராயிருந்த ஹென்றிக் சுவாத்து குறூன் (Hendrick Zwaarde Croon) தனது தேசாதிபதிக்கு எழுதிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளான்.

அதில் "இவ் வன்னியர்கள் பிறப்பால் கம்பனியின் (ஒல்லாந்து வர்த்தகக் கம்பனி) பிரசைகளாக இருந்தும், சாதியில் பொதுவான வேளாளராயிருந்தும் காலகதியில் மிகவும் செருக்குக் கொண்டவர்களாய் 'வன்னியன்' என்னும் பதவி மிகவும் மேலான பதவி என்று நினைக்கிறார்கள். 'வன்னியன்' என்னும் பதவியை 'கம்பனியே' இவர்களுக்கு அளித்திருந்த போதும், கம்பனியையோ அதன் மேலுத்தியோகத்தவர்களையோ இவர்கள் மதிக்கிறார்களில்லை. கம்பனி உத்தியோகத்தர் முன் சென்று தக்க மரியாதையுடன் பணிவு காட்டுவது தங்களுக்கு வேண்டாத ஒன்று என்று இவர்கள் நினைக்கிறார்கள்" என்று எழுதப்பட்டுள்ளது.

**'வன்னியர்கள்' என்று அழைக்கப்படும் வன்னிப் பிரதேச ஆட்சியாளர்கள் சோழர்கள் இலங்கைக்கு படையெடுத்த காலத்தில் அவர்களுடைய படைத் தலைவர்களாக வந்து அப் பிரதேசத்தில் குடியேறியவர்கள் என்று கருதப்படுகிறது. சோழர்கள் அந்த நிலத்தை அவர்களுக்குத் தானமாகக் கொடுத்ததால் அவர்களுடைய சாதிப் பெயரால் அந்த நிலம் வன்னிநாடு என்று என்று அழைக்கப்பட்டது. ஆனால் அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் அனைவரும் 'வன்னியர்கள்' எனப்படும் சாதி அமைப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பது ஒரு முக்கியமான விடயம்**

**- நக்கீரன்**